உ

சிவமயம்

# வெருகல் பதியுறை வேலவர்

## போற்றிப் பாமாலை



தொகுப்பும் ஆக்கமும்:

கலாபூஷணம் நாகமணி விநாயகமூர்த்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



ஓம் கணேசாய நமஹ

திருச்சிற்றம்பலம்

வாரணத் தானை அயன்விண் ணோரை மலர்க் கரத்து
வாரணத் தானை மகத்துவன் றோன்மைந் தனைத் துவச
வாரணத் தானை துணைநயந் தானை வயல் அருணை
வாரணத் தானை திறைகொண்ட யானையை வாழ்த்துவனே.

# வெருகல் பதியுறை வேலவர் போற்றிப்பாமாலை


ஆக்கமும் தொகுப்பும்:

புலவர் நாகமணி விநாயகமூர்த்தி

சேனைக்குடியிருப்பு



05.09.2011

ஈஸ்வரி வெளியீடு: 29

விலை: 75/=




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருப்புகழ்

## விநாயகர் துதி

விடம் அடைசு வேலை அமரர் படை சூலம்
விஜயன் விடு பாணம் - எனவே தான்
விழியும் அதிபார விதமும் உடை மாதர்
வினையின் விளைவேதும் - அறியாதே
கடி உலவு பாயல் பகல் இரவொனது
கல்விதனில் மூழ்கி - வறிதாய
கயவன் அறிவீணன் இவனும் உயர் நீடு
கழல் இணைகள் சேர - அருள்வாயே
இடையர் சிறு பாலை திருடி கொடு போக
இறைவன் மகன் வாய்மை - அறியாதே
இதய மிக வாடி உடைய பிழை நாத
கணபதி என் நாமம் - முறைகூற
அடையலவர் ஆவிவெருவ அடி கூற
அசலும் அறியாமல் - அவர் ஓட
அகல்வதென டாசொல் எனவு முடிசாட
அறிவருளும் ஆனை - முகவோனே

## வெருகல் பதி வேலவர் திருப்புகழ்

தந்தந் தனதன தந்தந் தனதன - தனதன

கஞ்ச முகமலர் வஞ்சியர் தங்களின் மிஞ்சிய வாசை கொண் - றடிநாயேன்
கவலையினால் நித மலைத்து திரியுங் காரண மின்ன தென் - தறியேனே
கொஞ்சிய வள்ளி குறக்கொடி மகிழ்திடக் குறிஞ்சியில் சென்றிடு - குமரேசா
குற்றம் பொறுத்துன் நித்தமும் மலர்ப்பதங் கும்பிடுவரமதை - யருள்வாயே
வஞ்சியாம் தெய்வ யானையை மணந்து வானவர்க்கரசினை - அழித்தாயோ
வருந்திடு மடியேன் வினையினை நீக்கி வைப்பது உன் கடன் - கதிர வேலே
மஞ்ஞையிலேறி மாங்கனி வாங்க வலமதாயுலகை - வந்தோனே
மாதவர் போற்றும் வெருகல் பதிதனில் மகிமையோடமர்ந்த - பெருமாளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

பாம்பன் சுவாமிகள் அருளிச் செய்த

# சண்முக கவசம்

திருச்சிற்றம்பலம்

01 அண்டமாய் அவனியாகி யறியொணாப் பொருளதாகித்
தொண்டர்கள் குருவுமாகித் துகளறு தெய்வமாகித்
எண்திசை போற்ற நின்ற என்னருள் ஈசனான
திண்திறல் சரவணத்தான் தினமும்என் சிரசைக் காக்க

02 ஆதியாங் கயிலைச் செல்வன் அணிநெற்றி தன்னைக்காக்க
தாதவிழ் கடம்பந்தாரன் தானிரு நுதலைக்காக்க
சோதியாந் தணிகையீசன் துரிசிலா விழியைக் காக்க
நாதனங் கார்த்திகேயன் நாசியை நயந்து காக்க

03 இருசெவி களையுஞ் செவ்வேள் இயல்புடன் காக்கவாயை
முருகவேள் காக்க நாப்பல்முழுதும் நற்குமரன் காக்க
துரிசறு கதுப்பையானைத் துண்டனார் துணைவன் காக்க
திருவுடன் பிடரி தன்னைச் சிவ சுப்பிர மணியன் காக்க

04 ஈசனாம் வாகுலோலன் யெனது அந்தரத்தைக் காக்க
தேசுறு தோள்விலாவும் திருமகள் மருகன் காக்க
ஆசிலா மார்பை யீராறாறுயுதனார் காக்க என்தன்
ஏசிலா முழங்கைதன்னை யெழிற்குறிஞ்சிக் கோனார் காக்க

05 உறுதியாய் முன்கைதன்னை உமையிள மதளை காக்க
தறுகணேறிடவே என்கைத் தலத்தைமா முருகன் காக்க
புறங்கையை அயிலோன் காக்க பொறிக்கரவிரல்கள் பத்தும்
பிறங்குமால் மருகன் காக்க பின் முதுகைச் சேயோன் காக்க

06 ஊணிறை வயிற்றை மஞ்ஞை யூர்தியோன் காக்க வம்புத்
தோணிமிர் சுரேசன் உந்திச் சுழியினைக் காக்ககுய்ய
நாணினையங்கி கௌரி நந்தனன் காக்க பீஜ
ஆணியைக் கந்தன் காக்க அறுமுகன் குதத்தைக் காக்க

07 எஞ்சிடா திடுப்பை வேலுக்கிறைவனார் காக்கக் காக்க
அஞ்சனமோ ரிரண்டு அரண் மகன் காக்கக் காக்க
விஞ்சிடுபொருட் காங்கேயன் விளரடித்தொடையைக் காக்க
செஞ்சர ணேசவாசன் திமிருமுன் தொடையைக் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08 ஏரகத்தேவன் என் தாள் இரு முழங்காலும் காக்க
சீருடைக் கணைக்கால் தன்னைச் சீரலை வாய்த்தே காக்க
நேருடைப் பரடிரண்டு நிகழ்பரங்கிரியன் காக்க
சீரிய குதிக்கால் தன்னைத் திருச்சோலை முருகன் காக்க

09 ஐயுறு மலையன் பாதத்துஅமர் பத்துவிரலுங்காக்க
பையுறு பழநிநாத பரன்அகங் காலைக் காக்க
மெய்யுடன் முழுவதும் ஆதிவிமல சண்முகவன் காக்க
தெய்வநாயக விசாகன் தினமும் என்நெஞ்சைக் காக்க

10 ஒலியெழ வுரத்த சத்தத்தொடுவரு பூதப்பிரேதம்
பலிகொள் இராக்கதப்பேய் பலகணத்து எவையானாலும்
கிலிகொளா எனை வேல்காக்க கெடுபரர் செய்யும் சூனியம்
வலியுள மந்த்ர தந்த்ரம் வருத்திடாது அயில்வேல் காக்க

11 ஓங்கிய சீற்றம் கொண்டு உவணிவில் வேல் சூலங்கள்
தாங்கிய தண்டம் எய்யுந் தடிபரசு ஈட்டியாதும்
பாங்குடை யாயுதங்கள் பகைவர் என்மேலே யோச்சின்
தீங்கு செய்யாமல் என்னைத் திருக்கைவேல் காக்கக் காக்க

12 ஔவிய முளர் ஊன் உண்போர் அசடர் பேய் அரக்கர்புல்லர்
தெய்வர்கள் எவரானாலும் திடமுட னெனைமற் கட்டத்
தவ்வியே வருவாராயின் சாரசரமெலாம் புரக்கும்
கவ்வுடைச் சூரசண்டன் கையினால் காக்கக் காக்க

13 கடுவிடப் பாந்தள் சிங்கம் கரடி நாய் புலி மதயானை
கொடிய தேள்நாய் குரங்கு கோலமார்ச்சாலம் சம்பு
நடையுடை யெதனாலேனும் நானிடர்ப் பட்டிடாமல்
சடிதியில் வடிவேல் காக்க சானவி முனைவேல் காக்க

14 ஙகரமே போற்றஎழில் ஞானவேல் காக்க வன்புள்
சிகவரிதேள் நண்டுக்காலி செய்யன் ஏறு ஆலப்புல்லி
நகமுடை ஓந்தி பூரான்நளி வண்டு புலியின்பூச்சி
உகமிசை யிவையால் எனக்கோர் ஊறிலாது ஐவேல் காக்க

15 சலந்திலுய்வன் மீனேறு தண்டுடைத் திருக்கை மற்றும்
நிலத்திலும் சலத்திலுங் தான் நெடுந்துயர் தரற்கேயுள்ளன்
குலத்தினால்நான் வருத்தங்கொண்டிடாது அவ்வவ்வேளை
பவத்துடனிருந்து காக்க பாவகி கூர்வேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 ஞமலியம் பரியன் கைவேல் நவக்கிரகக்கோள்கள் காக்க
சுமவிழி நோய்கள் தந்தசூலை யாக்கிராண ரோகம்
திமிர்கழல் வாதம் சோகை சிரமடி கர்ணரோகம்
எமையணுகாமலே பன்னிருபுயன் சயவேலன் காக்க

17 டமருத் தடிபோல்நைக்குந் தலையிடி கண்டமாலை
குமுறு விப்புருதி குன்மம் குடல்வலி ஈழை காசம்
நிமிரொணா திருத்தும் வெட்டை நீர்ப்பிர மேகமெல்லாம்
எமையடையாமலே குன்றெறிந்தவன் கைவேல் காக்க

18 இணக்கமில்லாத பித்தளரிவு மாசுரங்கள் கைகால்
முணக்கவே குறைக்குங் குஷ்டம் மூலவெண்முளை தீ மந்தம்
சணத்திலே கொல்லும் சன்னி சாலமென் றறையுமிந்தப்
பிணிக்குலம் எனையாளாமல் பெருஞ்சத்திவடிவேல் காக்க

19 தவனாமா ரோகம் வாதம் கயித்தம் அரோகம் மெய்
சூறவே செய்யு மூலச்சூடி யிளைப்பு உடற்று விக்கல்
அவதிசெய் பேதி சீழ்நோய் அண்டவாதங்கள் சூலை
எவையும் என்னிடத்து எய்தாமல் எம்பிரான் தணிவேல் காக்க

20 நமைப்புறு கிரந்தி வீக்கம் நணுகிடு பாண்டு சோகம்
அமர்த்திடுகருமை வெண்மையாகுபலதொழுநோய் கக்கல்
இமைக்குமுன் உறுவலிப் போடு எழுபுடைப் பகந்தராதி
இமைப்பொழுதேனும் என்னை யெய்தாலமருள் வேல்காக்க

21 பல்லது கடித்து மீசை படபடஎன்றே துடிக்கக்
கல்லினும் வலிய நெஞ்சங் காட்டியே யுருட்டி நோக்கி
எல்லினும் கரியமேனி யெமரிடர் வரினுமென்னை
ஒல்லையில் தாரகாரி ஓம் ஐம் ரீம் வேல் காக்க

22 மண்ணிலும் மரத்தின்மீதும் மலையிலும் நெருப்பின் மீதும்
தண்ணிறை சலத்தின் மீதும் சாரிசெய் யூர்திமீதும்
விண்ணிலும் பிலத்தினுள்ளும் வேறெந்தவிடத்துமென்னை
நண்ணிவந்தருளார் சஷ்டிநாதன் வேல் காக்கக் காக்க

23 யகரமேபோல் சூலேந்தும் நறும்புயன் வேல்முன் காக்க
அகரமே முதலாம் ஈராறு அம்பகம் வேல்பின் காக்க
சகர மோடாறு மானோன் தன்கைவேல் நடுவிற் காக்க
சிகரமின் தேவமோலி திகழைவேல் கீழ் மேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 ரஞ்சிதமொழி தேவயானை நாயகன் வள்ளி பாங்கன்
செஞ்சயவேல் கிழக்கில் திறமுடன் காக்க அங்கித்
விஞ்சிடு திசையின் ஞானவீரன் வேல் காக்க தெற்கில்
எஞ்சிடாக்கதிர் காமத்தோன் இகலுடைக்கரவேல் காக்க

25 லகரமேபோல் காளிங்கனல் லுடனொளிய நின்று
தகரமர்த்தனமே செய்த சங்கரி முருகன் கைவேல்
நிகழென நிருதிதிக்கில் நிலைபெறக் காக்க மேற்கில்
இகலயில் காக்க வாயுவினில் குகன் என் கதிர்வேல் காக்க

26 வடதிசை தன்னில் ஈசன்மகன் அருள் திருவேல் காக்க
விடையுடை ஈசன் திக்கில் வேதபோ தகன்வேல் காக்க
நடக்கையில் இருக்கு ஞான்றும் நவில்கையில் நிமிர்கையில் கீழ்
கிடக்கையில் தூங்கு ஞான்றும்கிரிதுளைத் துளவேல் காக்க

27 இழந்து போகாத வாழ்வை ஈயுமுத்தையனார் கைவேல்
வழங்கு நல்ஊண்உண்பதுபோதுமால் விளையாட்டின் போதும்
பழஞ்சுரர் போற்றும் பாதம் பணிந்து நெஞ்சடக்கும் போதும்
செழுங்குணத்தோடே காக்கத் திடமுடன் மயிலும் காக்க

28 இளமையில் வாலிபத்தில் ஏறிடு வயோதிபத்தில்
வளர் அறுமுகச் சிவன்தான் வந்தெனைக் காக்கக் காக்க
ஒளியெழு காலைமுன்னெல் ஓம் சிவசாமி காக்க
தெளிநடு பிற்பகற்கால் சிவகுருநாதன் காக்க

29 இறகுடைக் கோழித்தோகைக் இறை முன் இராவிற் காக்க
திறலுடைச் சூர்ப்பகத்தே திகழ்பின் இராவிற் காக்க
நறுவுசேர் தாள் சிலம்பன் நடுநிசி தன்னிற் காக்க
மறைதொழு குழகன் எங்கோன் மாறாது காக்கக் காக்க

30 இனமெனத் தொண்டரோடும் இணக்கிடும் செட்டி காக்க
தனிமையில் கூட்டந்தன்னில் சரவணபவனார் காக்க
நனியனுபூதி சொன்ன நாதர்கோன் காக்க வித்தைச்
கனிவோடு சொன்ன தாசன் கடவுள்தான் காக்கவந்தே

சுபம்.
சண்முக கவசம் முற்றிற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிவமயம்

# வெருகல் பதியுறை வேலவர் போற்றிப்பாமாலை

திருச்சிற்றம்பலம்

துதி

அப்பனே கஜமுகனே அரனார்மூத்த
அருஞ் செல்வக்கன்றே ஆனைமுகா இக்கவிக்கு
எப்பொழுதும் இடர்வராது என் தனர்கு முன்னில்
சப்பாணிப் பிள்ளையாரின் தாழ் துதித்தேன்.

மாலை

1 வண்ணமயில் வாகனனே கதிரை வேலா
வரமருளும் குருபரனே வெருகல் நாதா
உந்தனையான் அடிபணிந்து பாமாலை பாட
உறுதிகொண்டேன் வேல்முருகா வாருமையா
கந்தனையே நம்பினோர்க்கு கலக்கமுண்டோ
கடுகளவும் வேறறியேன் உன்னையன்றி
வந்தனை செய் தடியேன் மிகப் பாடுதற்கு - சுவாமி
வரம் தருவாய் வெருகல் பதி வடிவேலோனே

2 வாருமையா சண்முகனே ஏழைமுன்னே
வருந்துகின்றேன் வென் நோயால் பலநாளாக
பாருமையா தாய் இரங்கும் பண்மைபோல
பார்த்தணைத்துச் சேயனைக் காருமையா
தீருமையா பிறவிப்பிணித் துன்பமெல்லாம்
தீமைகளும் கிரகபகை தோஷம் மாற
வேறேது எண்ணமில்லை முருகா ஐயா - சுவாமி
வெருகலம் பதிதன்னிலுறை வேலே போற்றி

3 வித்தகனே சித்திரவேல் சுவாமிநாதா
விண்ணகத்தாய் தெய்வானை வள்ளிபங்கா
மத்தரிமுகற் கிளையவனோர் கோவே
வலம்வந்து உன் பதியைப் பணிந்த பேர்க்கு
அத்தன் அருள் சித்திகளும் வெற்றியாகும்
அவளருளால் நமதில்லம் ஒளியே வீசும்
பக்தர் தமக்கருட் காட்ஷி கொடுத்த வேலே - சுவாமி
பழமைசெறி வெருகலுறை வேலே பேற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 வீணாகக் காலத்தை கழித்த பாவி
விலை மாதர் தங்களோடு இணைந்த பாவி
காணாத காட்சிகளைக் கண்டேனென்று
கற்பனை செய்து பொய்ச் சாட்சி சொன்ன பாவி
வாழ்நாளில் பெற்ற என் தந்தை தாயை
வசை பாடி குரு நிந்தை செய்த பாவி
தாழ்பணிந்தேன் இப்பாவி தனை தடுத்தேயாழ்வாய் -சுவாமி
சடாட்சரனே வெருகல் பதிக்கரசே போற்றி

5 வுடமையுடன் உயிர்களையும் இழந்தோமையா
ஊருராய் அகதிகளாய் வாழ்ந்தோமையா
கடமை செய்யுமதிகாரி பலபேர் வந்தும்
கணக்கிட்டு கொடு போறார் பலநாளாக
விடலைகளும் பெருமரமும் ஆடும் மாடும்
வீணாக அழிந்ததையா வெருகல் நாதா
மடையன் நான் உன் பணிக்கு தந்தேனில்லை - சுவாமி
மதிர நிணல் வெருகல் பதிக்கரசே போற்றி

6 வூரைவிட்டு உன் பதிக்கு நடையாய் வந்து
உறங்காது இருந்தேனே உன்னைக்காண
ஆரிடம் முறையிடுவேன் அப்பா வேலா
அன்னை தந்தை குருவெல்லாம் நீதானையா
பேரழிந்து போகுமுதல் பிறவித்துன்பம்
பின் தொடரா திருக்க அருள் தாருமையா
பார்போற்றும் மகாவலிக்கங்கை சூழ்ந்த - சுவாமி
பண்ணவனே வெருகல் பதிக்கரசே போற்றி

7 வெண்கவரி கொடிகளுடன் ஆலவட்டம்
விதவிதமாய் அடியவர்கள் பிடித்து நிற்க
தண்ணொழிசேர் இருமாதுடனே தேரின் மீது
தான் வந்து எளியேனின் குறையைத் தீர்ப்பாய்
விண்முட்டும் வேலவனுக் கரோகரா என்ற சத்தம்
வெருகல் பதி எண்கணுமே கேட்குதப்பா
உன் ஆணை தீயிறங்க உதவிதாரும் - சுவாமி
உயர்பதியாம் வெருகல் என் நாதா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8 வேண்டுவோர்க்கு நல்லவரம் கொடுக்கும் கந்தா
உன் விரதமதைப் பிடித்தோர்க்கு அருளைத் தாதா
ஆண்டியென குறவனத்தில் வேடனாகி
ஆரணங்கு வள்ளி தனை அணைத்த நாதா
தாண்டுதற்கு முடியுதில்லை விதி வெள்ளத்தில்
தத்தளிக்கோம் கர்மவினைப் பலனால் நாங்கள்
வேண்டுகின்றோம் வேலவனே ஓடிவாரும் - சுவாமி
வெருகல் பதி தனிலுறையும் வேலே போற்றி

9 வையகத்தின் நிலையில்லா வாழ்வை நம்பி
வடிவேலா பகலிரவாய் தினமுளைத்து
தையவர்க்கு தாலியுடன் காணிவீடும்
தான் கட்டி விதம் விதமாய் அழகு பார்த்தேன்
மெய் சலித்து வயதேறிக் கூனுமாக என்
மின்னனையால் மக்கள் சுற்றம் வெறுக்குதையா
ஐயகோ என் செய்வேன் வடிவேலோனே - சுவாமி
அமைதி தரும் வெருகல் பதிக்கரசே போற்றி

10 வொன்று மறியாப் பாவிகளின் உடமை தன்னை
ஓரமது பேசுகிறார் தன் சொந்தமென்று
மன்றுக்கு வளக்காடும் மனித நெஞ்சம்
மாறியது போகுதையா மனுநீதியற்று
குன்று மலை குடிகொண்ட குமரா தர்மம்
குடியிருக்க வளியொன்று செய்யேனையா
என்று முனை மறவாது துதிப்பேனையா - சுவாமி
எம் குருவே வெருகல் பதிக்கரசே போற்றி

11 வோங்கார றீங்காரா நாதா வாவா
ஓம் சிவ சுப்பிரமணியா உடனே வாவா
ஆங்காரம் கொண்ட மகா சூரர் தம்மை
அழித்த வேற்கையோனே அப்பா வாவா
றீங்கார சிவசக்தி அணைத்த பாலா
சித்திர வேலாயுதனே சிவமே வாவா
பாங்கான கொங்கையது அருகில் மேவும் - சுவாமி
பழம் பதியாம் வெருகல் பதிக்கரசே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 வௌவென்றும் உவ்வென்றும் வரதனென்றும்
வாமனென்றும் மச்சவுரு மகரனென்றும்
சௌவ்வென்றும் தந்தையர்க்கு குருநாதனென்றும்
சகல கலை நாதனென்றும் அறுபடையோனென்றும்
மௌவென்றும் வடிவுடையக் குமரனென்றும்
வரமருளும் சுப்பிரமணிய வள்ளலென்றும்
சௌவ்வென்றும் மயில் நடனம் புரிவேலோனே - சுவாமி
சக்தி வேல் வெருகல் பதிக்கரசே போற்றி

13 இவ்வையகம் தன்னில் உன் திருநாமம் கூற
வரும் பயமும் சகல பிணிதீரவேண்டும்
கைகுவித்து உனைத்துதிக்கும் அடியார்க்கெல்லாம்
கவலையது தீர்த்து குடி பெருக வேண்டும்
ஐயனே உன் கங்கை நீர்பட்டாலும் என்
அழுக்கற்று மேனி புனிதமாக வேண்டும்
சேயனைக் திருக்கடைக் கண்பார்த்தே யாள்வாய் - சுவாமி
தினம் போற்றும் வெருகல் பதிக்கரசே போற்றி

14 சண்முகனே சற்குருவே சக்திவேலா
தாழ்பணிந்தேன் அப்பனே உன் தகமை வேண்டி
பண்ணுயிரை படைத்த பிரமதேவன்
பாலிக்க வேண்டுகின்றேன் பாதம் தன்னை
கண்மவினை தனை அகற்றும் காலதேவன்
காத்திடென்று கைகுவித்தேன் சிரசில் வைத்து
என்தெய்வமே வெருகல் பதி உறைவேலோனே - சுவாமி
சித்திரவேல் அடியார்க்கு அருளே போற்றி

15 சாதி பல கூறுகின்றார் தன்னைத்தானும்
தானறியார் கற்றறிந்த மூடரெல்லாம்
ஆதியிலே அவ்வையரும் இரண்டே சாதிஎன
அன்பாக கூறிவைத்தார் இட்டார் மேலோர்
வேதியராய் இருந்தாலும் இடாதாராகில்
மிக்க இழிகுலத்தாரே மேதினியோர்
பாதிநதி பரமனிட பாலா வாவா - சுவாமி
பார்புகழும் வெருகல்பதிக்கரசே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16 சிவனுமையின் மகனான செவ்வேள் கந்தா
சிலகாலம் வென்நோயால் வாடலானேன்
பவமேது செய்தேனோ பாரிலுள்ளோர்
பழித்து எனைச் சிரிப்பதற்கு வைக்கலாமோ
குகனே உன் திருப்பார்வை எளியன் மீது
கொஞ்சமெனும் கடைக்கண் பார்க்கொண்ணாதோ
மகரமெனும் வடிவு கொண்ட மலை வேலோனே - சுவாமி
வந்தருள் செய் வெருகல் பதிக்கரசே போற்றி

17 சீரற்ற வாழ்க்கையிலே சில நாள் வாழ்ந்து
சிக்குற்றுத் திரிந்தேனே பெரும் ஆசைகொண்டு
பார் போற்றும் வள்ளி மணவாளனே உனை
பணிவதற்கு ஒரு நிமிடம் கிடைக்கவில்லை
ஊருராய் பலரோடு குடித்து ஆடி
உடமைகளும் கைப்பொருளும் கரைந்ததையா
சேர்கொங்கை முலை உமையின் மகனே வாராய் - சுவாமி
செங்கதிரே வெருகல் பதிக்கரசே போற்றி

18 சுற்றிவரும் கொங்கையது பொங்கியோட
சுவாமி உன்வீதியிலே அடியாராட
வெற்றிகொண்ட வேல் துள்ளி விரைந்து ஆட
விண்ணகத் தேவர்களும் மலர்கள் தூவ
பொற்கமலம் போற்றி செய்து புலவர் பாட
பொருதவரும் அசுரபடை திரும்பி ஓட
நற்தெய்வானை வள்ளி மணாளா ஐயா - சுவாமி
நலமருளும் வெருகல் பதிக்கரசே போற்றி

19 சூழவுள்ள மக்கள் ஒன்றாய்ச் சேர்ந்து வந்து
திருவுலா வெளிவீதி தீயும் மூட்டி
ஆழக் குழி தீமீது இறங்கும் காட்சி
அப்பனே பார்ப்பதற்கு நெஞ்சை அள்ளும்
மாளுதற்கு அஞ்சாத மறவர் கூட்டம்
மலையேறிப் பணிவதனால் அழகு சேர்க்கும்
வாழவளி அடியேற்கு காட்டுடமையா - சுவாமி
வண்ணவேல் வெருகல்பதிக்கரசே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

20 செவிலியம்மை நம்பிராசன் வளர்த்த மங்கை
செல்வி எனும் வள்ளிதன் வனத்திலே சென்று
கவண் எறியும் கன்னிகையே இவ்வரவம் மீதால்
கலை ஒன்று வந்தனவா என் அம்பு பட்டு
குறமாதே கூறடி உன் கொவ்வை வாயால்
குருபரனே அருள் வதன வள்ளி தன்னை
திறமுடனே கேட்டு வடிவேடனான - சுவாமி
திகனொழியே வெருகல் பதிக்கரசே போற்றி

21 சேயோனே மாயவன் தன்மருகா வாவா
திருக்கோவில் உகந்தை மலைக்கண்ணே வாவா
காங்கேயா தென்கதிரை நல்லூர் நாதா
கதறுகின்றேன் மண்டூர்க் கந்தா வாவா
பாங்கான சித்தாண்டி பதியின் வாழ்வே
பரிதவிக்கும் அடியாரைக்காக்க வாவா
தீங்ககற்றி நல்வழியைக் காட்டுமையா - சுவாமி
திருவெருகல் பதியுறையும் செவ்வேள் போற்றி

22 சைவ தமிழ்க்கடவுளே என் சுவாமி வாவா
தகதகன ஒளிவீசும் வேலே வாவா
செய்யதிரு நீறழகா சிவமே வாவா
சிந்தை தனில் குடிகொண்ட திருவே வாவா
ஐயனே பன்னிருகை அழகா வாவா
அமுதே என் கண் மணியே அப்பா வாவா
தெய்வமே தினம் போற்ற ஓடி வாரும் - சுவாமி
திரு முருகா வெருகல் பதிக்கரசே போற்றி

23 சொந்தமென் இனபந்தம் துணையும் காணேன்
தொல்லுலகில் ஏழை எனும் நிலையுமானேன்
இந்த நல்லுலகத்தோர் இரப்போர்க்கீயும்
இதயமது இல்லை ஐயா வெருகல் நாதா
மந்த கெதி மாந்தரெல்லாம் வரம்பு தப்பி
மாறியே போகுமதையா என்ன செய்வேன்
சுந்தரம் சேர் கனிவாயா செந்தூர்க் கந்தா - சுவாமி
சுப்பிரமணியா வெருகல் பதிக்கரசே போற்றி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24 சோறு கறி சமைப்பதற்கு கையிலில்லை
தூங்குதற்கு திண்ணையில்லை தடுப்புமில்லை
மாறி ஒரு ஆடையைத்தான் இடுப்பில் கட்ட
வளியில்லை வேல்முருகா பணமுமில்லை
நாறுகின்ற சடலத்தை சுமந்து கொண்டு
நாய் போலே தெருத்தெருவாய் அலைந்தேனையா
பேர் போற்ற பெரியவனே ஏழை என்னை - சுவாமி
பின்னிரக்கம் தாரும் வெருகல்பதிக்கரசே போற்றி

25 சௌவுதசை எலும்புகளால் ஆன கூடு
சந்திரரும் சூரியரும் வாழும் வீடு
செவ்விதழ் தாமரையும் இருக்கும் ஆறு
சிற்றரசர் ஆட்சி செய்யும் அமைதி நாடு
கௌவுகின்ற புலி கரடி வாழும் காடு
காணுகின்ற பொருள் கண்டு பாயும் மந்தி
இவ்விதமாய் பல மிருகங்கள் எந்தனுள்ளே - சுவாமி
இதையடக்கு வெருகல் பதிக்கரசே போற்றி

26 இச்சை அற்று இருப்பதற்கு வரத்தைத் தாதா
எமது குறைநிறைவு பெற அருளைத் தாதா
பச்சைமயில் வாகனனே பண்பு நல் அன்பு தாதா
பதிதனிலே அடியவர்க்கு அமைதி தாதா
அச்சமற்று எம்இனமும் மதமும் கல்வி
அணையாது தமிழ்பரப்ப ஒளியைத் தாதா
உச்சிதமாய் வெருகல் பதி உதித்த வேலே - சுவாமி
உமை மகனே சிறி முருகா போற்றினேனே

சுபம்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# வெருகல் பதியுறை வேலவர்
## போற்றிப்பாமாலை

காப்பு

பொற்புலவு முச்சிப் பொருங்கங்கை சூழ் வெருகல்
விற்பனமாஞ் செல்வ வேலவனின் - அற்புதமார்
செஞ்சரணை யேத்தித் தினமுமய ரா துருகி
நெஞ்சமே வாழ்த்தாய் நினைந்து.

மாலை

01 அகரமுத லுகரமுமாய் நின்ற நாதா
அனுதினமு மடியேனுன் பதத்தை நாடி
இகமதனிற் போற்றி செய்து நிஷ்டை கூடி
இருவினையின் தொடாதிருப்ப தெந்தநாளோ
முகமலர்ந்து வந்தெனது மயலை நீக்கி
முத்திபெற வினியவழி தாரு மையா
பகலவன்போ லறுமுகமு மடியார் நோக்கப் - சுவாமி
பகரரிய வெருகல் பதிக்கரசே போற்றி

02 ஆறாறு தத்துவத்திற் கப்பால் நிற்கும்
அமலனருள் புத்திரனே தணிகை வாழ்வே
பேறான வள்ளியம்மை தன்னைச் சேரப்
பெருவனத்தில் மரமாகி நின்றாய் நீயும்
கூறாத மௌன நிலை யதனைக் காட்டக்
குருபரனே வருவதுவு மெப்போ வையா
மாறாத திருக்கருணை நல்கி யென்னைச் - சுவாமி
மலர்ப்பதனிற் சேர்ந்திடுவாய் வடிவே போற்றி

03 இத்தணத்தி னெரிபோலே என்தனுள்ளே
எப்பொழுது மிருக்குமுன்னை யெதிரே காணுந்
தந்திரங்கள் தனையறியேன் சுவாமி நாதா
தற்பரா யிதற்கு வழி தாருமையா
கொந்த விழுங் கொன்றைமலர் சூடிக் கொண்ட
கூறரிய மெய்ப்பொருளே வள்ளி வாழ்வே
வந்தெனது துயரகற்றி யடிமை கொள்வாய் - சுவாமி
வளர் வெருகல் மேனியருள் வடிவேல் போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04 ஈயாத லோபிகள் தன் னிடத்திற் சென்று
எப்பொழுதுங்கையேந்தி நிற்பதற்கோ
சேயாக விப்புவியிற் படைத்தா யையா
சிவ சிவா விதுவுமுந்தனாடல் தானோ
ஓயாது உள்ளுருகுவா ருள்ளந் தன்னில்
ஒளிவியக்காய் நின்றுலவு முமையாள் மைந்தா
பாய்ந்தோடும் கெங்கை மீதருகில் மேவும் - சுவாமி
பகரரிய வெருகல் மலைப் பதியே போற்றி

05 உண்மையுரை சாற்றி நின்ற சடாயு தன்னை
யூறுபடக் கதையினால் தாக்கிச் சென்று
வண்ணமுறு சானகியை வனத்தில் வைத்த
வன் நெஞ்ச ராவணனை வதைத்த வள்ளல்
தண்ணொளிபோ ஈன்றெடுத்த மாதர் தாமுந்
தயவுடனே யிருபாலும் மேவி வாழ்த்தத்
தண்டையோடு சிலம் பசைய வெருகல் வாழும் -சுவாமி
சாற்றரிய குருவான வடிவேலே போற்றி

06 ஊர்தோறு மிரந்துழன்று உன்னை நாடி
உருகிநிதம் வாடுகின்றேன் கந்தவேளே
தாரசையக் குண்டலங்க லொளியைக் காணச்
சண்முகனே வந்தெனது கவலை தீர்ப்பாய்
பார்தனிலே மேலோர்கள் உந்தனுக்குப்
பகரரியகிருபையது ரூபமென்றார்
வாரணிந்த கழபமுலை வள்ளி யோடு - சுவாமி
வந்தெனது துயரகற்றும் வாழ்வே போற்றி

07 என்னை நித மிருவினைகள் மிகவே வாட்ட
என்னதான் பாவங்கள் முன் செய்தேனோ
சொர்ணமயில் தனில்லேறி வந்திப்போது
துயரமதை மாற்றி வைப்பாய் சுவாமி நாதா
பண்ணரிய பழமறைக ளாய்ந்து இன்னும்
பகரவொணாத் திருவடிவே பழனி வாழ்வே
கன்னல் மொழிக் கன்னியர்க் களாலஞ் சுற்றக் - சுவாமி
கனகமுடி பனைந்துலவுங் கதிரே போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

08 ஏதமிலா வமரர் தமை யிடரேது செய்த
எண்ணரியசூரனுடல் தன்னை யன்று
மோதுகட லருகாக விருகூறாக்கித்
முத்திதனிற் சேர்த்து வைத்த முறைமை போலே
தாதவிழுங் கடப்பமலர் மார்புந்தோளுஞ்
சண்முகமும் வடிவேலுந் தமியேன் காணப்
பாதமலர் சூடிநித மாள்வாய்யையா - சுவாமி
பண்ணவர் தொழும் வெருகல் பதிக்கரசே போற்றி

09 ஐந்தான பூதமதால் எடுத்த தேகம்
அழியுமுன்னே வந்துனது கிருபை தந்துன்
மைந்தர்களை யருகழைத்த தாயைப்போலே
மகிழ்ச்சியுடன் மலர்ப்பதத்திற் சேர்ப்பாயையா
தந்தை நீ பராமுகமாய் விட்டால் யானுந்
தண்ணெழியைப் பெறுவதுமே எந்த நாளோ
மந்தார முல்லையணி கௌரி முன்னே - சுவாமி
மயிலேறி வலம் வந்த வடிவேலே போற்றி

10 ஒன்னார்கள் புரமெரித்த வமலனன்று
உதவவரு கண்மணியே யுமையாள் மைந்தா
என்னாளு மிவ்விதமாய் யடியேன் வாட
இரங்கி நீ கிருபை செய்யா திருப்பதேனோ
உன்னை நிதம் மறந்ததினாலிந்த வாதோ
ஊழ்வினையோ தவக்குறைவோ வோரே னிப்போ
கன்னல் மொழி வாய்திறந்து கழறுமையா - சுவாமி
கங்கை அருமேவி அருள் கந்தா போற்றி

11 ஓதிமுதற் கலைளெல்லா முன்னை யின்று
மோராது விட்டிருந்தால் லடியே ன்நானும்
வாதியற்றித் தேடுவதுமெங்கு தானோ
வளேனல் காத்திருந்த வள்ளி தன்னைச்
சோதித்து அடிமைகொள்ள வேடனாகிச்
சுறுசுறுப்பாய்ச் சென்று மரமான நீதா
இளமாது நங்கையர்கள் கவரிவீச - சுவாமி
இனிதுவுறு வெருகல் பதி அழகா போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

12 ஔவியமா யமரர் தமை யதமே செய்த
வசுரர்கிளை கொன்றளித்த வரனாரன்று
மௌவியமாய் மனத்தினிடை நினைத்த போது
வளர்முகங்களிரு மூன்றாய் வந்தசீலா
ஔவியே பிடித்தலைக்கும் நோய்களோட
அருமருந்தா மமிர்தமதை யூட்டி யுன்தன்
சௌவியமா மலரடியிற் சேர்ப்பாயையா - சுவாமி
தணிகைமலை வெருகல் பதித் தமிழே போற்றி

13 அஃகரவம் பூண்டதிரு அரனார் முன்னாள்
அழகுதிரு மாங்கனியைக் கையிலேந்தி
இக்கணமே யுலகைவலம் வந்த பேர்க்கு
இக்கனியை யீவதெனச் செப்பி நிற்க
உக்கிரமா மயிலேறி நொடிக்கு முன்னே
ஓடியே வருவதன் முன்கணேசன் பெற்றான்
சிக்கெனவே யுந்தனையான் பிடித்தேனையா - சுவாமி
சிவ கதிரே வெருகல் வாழ் சிவமே போற்றி போற்றி

**மூவிரு முகங்கள் போற்றி முகப்பொழிக் கருணை போற்றி
யாவரும் துதிக்க நின்ற வீராறு தோள்கள் போற்றி
காஞ்சிமா வடிவை குஞ்ச வோள் மலரடி போற்றி அன்னாஞ்
சேவலும் மயிலும் போற்றி திருக்கை வேல் போற்றி போற்றி**

**சண்முகக் கடவுள் போற்றி சரவணத்துதித்தோய் போற்றி
கண்மணி முருகா போற்றி கார்த்திகை பாலா போற்றி
தண்மணிக் கடம்ப மாலை தாங்கிய தோளா போற்றி
விண்மதி வதன வள்ளி வேலவா போற்றி போற்றி**

சுபம்



**வெருகல் பதியுறை வேலவர் போற்றிப்பாமாலை**
முற்றிற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தில்லைக் குயில்

தில்லாலங்கடி தில்லாலங்கடி தில்லாலக் குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
திருத்தணிகை வேலனைக் கூவடி தில்லாலக் குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
தில்லாலங்கடி

ஆறுபடையான் வீறு நடையான் தில்லாலக் குயிலே
முருகன் தில்லாலக் குயிலே
ஆலோல வள்ளி வேலனைக் கூவடி தில்லாலக் குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
தில்லாலங்கடி

எங்கள் குலத்தவன் தங்கவடிவனாம் தில்லாலக் குயிலே
குமரன் தில்லாலக் குயிலே
எத்திசை எங்கனும் கேட்டிடக் கூவடி தில்லாலக்குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
தில்லாலங்கடி

சேவற் கொடியனாம் சோனாபதியான் தில்லாலக் குயிலே
முருகன் தில்லாலக் குயிலே
தேவர் சிறைதனை மீட்ட குமரன்டி தில்லாலக் குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
தில்லாலங்கடி

மாயன் மருகனாம் சேயோன் சிவன் மகன் தில்லாலக் குயிலே
முருகன் தில்லாலக் குயிலே
மறவன் செந்தமிழ் குமரனைக் கூவடி தில்லாலக் குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
தில்லாலங்கடி

வேடுவனாகவே காட்டினைச் சென்றவன் தில்லாலக் குயிலே
வேலன் தில்லாலக் குயிலே
வேங்கைமரமாக நின்றதைக் கூவடி தில்லாலக் குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
தில்லாலங்கடி

தேனும் தினைமா திரட்டி தின்றவன் தில்லாலக் குயிலே
கிழவன் தில்லாலக் குயிலே
செட்டியாகவே வளையல் போட்டவன் தில்லாலக் குயிலே
வள்ளிக்கு தில்லாலக் குயிலே
தில்லாலங்கடி

சேலைக்கிளியே வேலனைக் கூவடி தில்லாலக் குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
தேகை மயிலாட பாடிக் கூவடி தில்லாலக் குயிலே
மயிலே தில்லாலக் குயிலே
தில்லாலங்கடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆடு மயிலே

ஆடு மயிலே கூத்தாடு மயிலே
ஆறுமுக வேலனைக் கண்டாடு மயிலே

கூறு தமிழ்வாறு படைவீடு உடையான்
குன்று மலை எங்கணுமே வாழும் படையோன்
வீறுகொண்ட சூரன் உடல் கூறுபடவே
விட்டறுத்த வேலைத் தூக்கி ஆடுமயிலே (ஆடுமயிலே)

காலனைக் காலாலே உதைத்தவன் மைந்தன்
கானவள்ளி தனக்காக வேடன் ஆகினான்
பாலகுமரேசன் உமைவாரி அணைத்த
வள்ளலை வணங்கிக் கொண்டு ஆடுமயிலே (ஆடுமயிலே)

ஏழு கடல் வான் புவியும் எங்கனுமாக
இறகைச் சிறகடித்து எங்கும் பறந்து
சூழும் மாய்கை ஆசையற்ற தொல்லுலகிலே
தூக்கி ஒரு காலுடனே ஆடுமயிலே (ஆடுமயிலே)

நம்பும் மடியாரிடத்தி நாட்டியமிடும்
நானேன் னென்ற ஆணவத்தை வீழ்த்தியும் விடும்
அன்பு கொண்டு அடியார்கள் கண்டு களிக்க பழனி
ஆண்டவனை வேண்டிக் கொண்டாடுமயிலே (ஆடுமயிலே)

துன்பம் துயர் இன்பம் ஏழ்மை மாறியேவரும்
அன்பருக்கு அஞ்சவென்று அருகினில் வரும்
கண் இமைக்கும் நேரத்திலும் காட்சியும் தரும் மனக்
காதல் கொண்ட தோகை விரித்தாடு மயிலே (ஆடுமயிலே)

பற்றரையி மாற்றுத் தங்கம் சித்திர வேலன் வெருகல்
பதியில் அருள் கொடுக்கும் சக்தியின் பாலன்
சித்திரத் தேர் சித்தாண்டி ரெத்தினவேலை
திரும்பித் துதித்து கொண்டாடு மயிலே (ஆடுமயிலே)

அல்லல் போக்கி இன்னல் தீர்க்கும் தில்லையில் வேலன்
அண்டினோரை ஆதரிக்கும் நல்லை நகர் வேல்
வல்லமை கொண்ட உகந்தை வாழும் வேலை
வணங்கித் துதித்துக் கொண்டு ஆடுமயிலே (ஆடுமயிலே)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# உனைப்பாட தவம் வேண்டுமா

ஏழை என் மனம் எண்ணம் நிறைவேறுமா
எதிர் கால பயணங்கள் கரை சேருமா
மழை நீரில் தினம் மூழ்கி அலை மோதுமா
பெருமரம் சாய்ந்து என்வீடு பாழாகுமா

(முருகா ஏழை)

வழிமீது தடை ஏதும் எதிர் தோன்றுமா என்
விழி நீர் தான் தினம் ஒடி ஆறாகுமா
சுழிக் காற்று மிக வீசி எனை வீழ்த்துமா நான்
தொடர்கின்ற பயணங்கள் தடையாகுமா

(முருகா ஏழை)

கண்காணும் பொருள் வந்து கைகூடுமா என்
கனவெல்லாம் ஒரு நாளில் நனவாகுமா
விண்தோன்றும் முகில் போல அழிந்தோடுமா பாழ்
விதிவந்து எனைச் சூழ்ந்து தினம் ஆட்டுமா

(முருகா ஏழை)

நடைநோயும் பிணிவந்து நலிந்தாட்டுமா
என்னை - நரகத்தில் அழுந்தாது கரையேற்றுமா
படர்கின்ற கொடி தாவி உயர் ஏறுமா ஏழை
படும்பாடு கண்டுனது மனமிரங்குமா

(முருகா ஏழை)

துன்பங்கள் எனைவாட்டி துயராக்குமா அந்தத்
துயரத்தில் முருகா உன் வேல் தோன்றுமா
அன்பென்னும் குமரா அழகு முகம் தோன்றுமா
அடியேன் நான் உனைப்பாட தவம் வேண்டுமா

(முருகா ஏழை)

சுபம்



முருகா சரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலவர் நா.விநாயகமூர்த்தி அவர்களின் இதர வெளியீடுகள்

## ஆக்க தொகுப்பு நூல்களும்:-

| | |
|---|---|
| திருமுருகன் திருப்பாடற் திரட்டு ஆக்கம் | 210.00 |
| குலதெய்வ வழிபாட்டுப் பாடல்கள் (ஆக்கமும் தொகுப்பும்) | 310.00 |
| முத்தான முருகன் தோத்திரப்பாடல்கள் | 130.00 |
| உகந்தைமலைக் குழந்தை முருகன் பாமாலை | 50.00 |

## தொகுப்பு நூல்கள்:-

| | |
|---|---|
| வைகுந்த மோட்சமாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 70.00 |
| கழுகுமலைப் பத்து | 80.00 |
| சிவ செந்திமாலை | 60.00 |
| ஆதிமூல கெருடப்பத்து | 70.00 |
| சிவமுத்து மணிமாலை (ஆக்கமும் தொகுப்பும்) | 155.00 |
| சித்தர் ஞான வாலைக்கும்மி | 120.00 |
| வயிரவர் காவியப்பாடல்கள் | 70.00 |
| சனி பகவான் துதி தோத்திரப் பாடல்கள் | 60.00 |
| திருவாசகத் தேன்துளிகள் | 90.00 |
| சிவமுத்துமாரியம்மன் குளுர்த்திப்பாடல்கள் | 135.00 |
| காளியம்மன் காவியகும்மிப்பாடல்கள் (ஆக்கமும் தொகுப்பும்) | 145.00 |
| திருகோயில் சித்திரவேலாயுத சுவாமி பேரில் போற்றிப் பாமாலை | 60.00 |
| மண்டூர் முருகன் பவளமணி மாலை | 75.00 |
| வெருகல் பதிவுறை வேலவர் போற்றிப் பாமாலை | 75.00 |

மேற்படி நூல்கள் தேவையானோர்
கீழ்வரும் முகவரியில் தொடர்பு கொண்டு பெற முடியும்

ஈஸ்வரி இல்லம்
மாரியம்மன் கோயில் வீதி,
சேனைக்குடியிருப்பு-01B
077-6538667

விக்டரி அச்சகம் கல்முனை 0770643990

விலை: 75/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org